From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.204 /2021

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Subramani | Father/Husband Name | : Karuppaiah |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 23.05.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

மு.வி.

நான் மேலூர் கடலைக்கார தெருவில் வசித்து வருகிறேன். நான் மிக்சர் கடையில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை, எனக்கு அவர்களை தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து போலீசார் வாங்கினார்கள். அதில உள்ள விவரங்களை நான் கொடுக்கவில்ல. **(புகாரிலுள்ள அ.சா.1-ன் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர். போலிசார் என்னை சந்தேகக்கேசில் பிடித்து வந்தார்கள். என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன்.

**(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்கும்படி அரசுதரப்பில் அனுமதிகோரியதன் அடிப்படையீல் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 03.09.21ம் தேதி நானும் பாண்டி என்பவரும் கூலிவேலைக்கு சென்றுவிட்டு சின்னஅரசன்பட்டியிலிருந்து செக்கடி நோக்கி அணிதா கலப்பை கம்பெணி அருகே திருவாதவூர்- மேலூர் ரோட்டில் நடந்து வந்துகொண்டிருந்தபோது பின்னால் விசாரித்து தெரிந்துகொண்ட பிரபா என்ற எம்.எஸ். மற்றும் முனிச்சாமி ஆகிய இருவரும் டி.என்.59 சி.ஒய். 6626 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தில் எங்கள் முன்பாக வந்து எங்களை வழிமறித்து நின்றார்கள்

என்று கூறிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தின்போது இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து வந்த பிரபா என்ற எம்.எஸ். என்பவர் வண்யிலிருந்த கீழே இறங்கி முனிச்சாமியை பார்த்து அந்த கத்தியை எடுடா என்று 1-வது எதிரி கூறியதாக கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உடனே முனிச்சாமி பைக்கின் பவுச்சிலிருந்த சிறிய கத்தியை எடுத்து பிரபாவிடம் கொடுத்தபோது அதை வாங்கிய பிரபா எங்கள் இருவரையும் பார்த்து பாக்கெட்டில் எவ்வளவு பணம் வைத்திருக்கிறீர்கள் கொடுங்கடா இல்லையென்றால் குத்திவிடுவேன் என்று மிரட்டி கத்தியை ஓங்கியபோது நாங்கள் இருவரும் பயந்து நிற்கும்போதே பிரபா என்பவர் என் சட்டைபையில் கையைவிட்டு ரூ. 200 பணத்தை எடுத்தார் என்றும், அதேபோல் பாண்டியின் சட்டைப்பையிலிருந்த ரூ.300-ஐ பாண்டி பயந்துபோய் முனிச்சாமியிடம் கொடுத்துவிட்டார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் இருவரும் இந்த சம்பவத்தைப்பற்றி வெளியே சொன்னால் உங்களை தொலைத்துவிடுவோம் என்று கத்தியை காட்டிக்கொண்டே அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்றும், நாங்கள் உயிர் பயத்துடன் அங்கிருந்து ஓடிவந்துவிட்டோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை: எதிரிகள்தரப்பில்**

அ.சா.ஆ.1 எனது கையெழுத்தானது நான் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்படாத வெற்று வெள்ளைத்தாளில் கையொப்பமிட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.204 /2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Pandi | Father/Husband Name | : Alagarsami |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 23.05.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

மு.வி.

நான் மேலூர் நாகம்மாள்கோவில் தெருவில் வசித்து வருகிறேன். காய்கறி கடை நடத்தி வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை, எனக்கு அவர்களை தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்கும்படி அரசுதரப்பில் அனுமதிகோரியதன் அடிப்படையீல் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 03.09.21ம் தேதி நானும் அ.சா.1-ம் கூலிவேலைக்கு சென்றுவிட்டு சின்னஅரசன்பட்டியிலிருந்து செக்கடி நோக்கி அணிதா கலப்பை கம்பெணி அருகே திருவாதவூர்- மேலூர் ரோட்டில் நடந்து வந்துகொண்டிருந்தபோது பின்னால் விசாரித்து தெரிந்துகொண்ட பிரபா என்ற எம்.எஸ். மற்றும் முனிச்சாமி ஆகிய இருவரும் டி.என்.59 சி.ஒய். 6626 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தில் எங்கள் முன்பாக வந்து எங்களை வழிமறித்து நின்றார்கள் என்று கூறிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தின்போது இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து வந்த பிரபா என்ற எம்.எஸ். என்பவர் வண்யிலிருந்த கீழே இறங்கி முனிச்சாமியை பார்த்து அந்த கத்தியை எடுடா என்று 1-வது எதிரி கூறியதாக கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால்

உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உடனே முனிச்சாமி பைக்கின் பவுச்சிலிருந்த சிறிய கத்தியை எடுத்து பிரபாவிடம் கொடுத்தபோது அதை வாங்கிய பிரபா எங்கள் இருவரையும் பார்த்து பாக்கெட்டில் எவ்வளவு பணம் வைத்திருக்கிறீர்கள் கொடுங்கடா இல்லையென்றால் குத்திவிடுவேன் என்று மிரட்டி கத்தியை ஓங்கியபோது நாங்கள் இருவரும் பயந்து நிற்கும்போதே பிரபா என்பவர் அ.சா.1-ன் சட்டைபையில் கையைவிட்டு ரூ. 200 பணத்தை எடுத்தார் என்றும், அதேபோல் என் சட்டைப்பையிலிருந்த ரூ.300-ஐ நான் பயந்துபோய் முனிச்சாமியிடம் கொடுத்துவிட்டதாக கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் இருவரும் இந்த சம்பவத்தைப்பற்றி வெளியே சொன்னால் உங்களை தொலைத்துவிடுவோம் என்று கத்தியை காட்டிக்கொண்டே அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்றும், நாங்கள் உயிர் பயத்துடன் அங்கிருந்து ஓடிவந்துவிட்டோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை: எதிரிகள்தரப்பில்**

இல்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.204 /2021

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Kaleeswaran | Father/Husband Name | : Ayyavu |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 23.05.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

மு.வி.

நான் எம்.மலம்பட்டியில் வசித்து வருகிறேன். டாடா ஏசி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியாது. ஆஜா் எதிரிகளை தெரியாது. சுமாா் 6 மாதங்களுக்கு முன்பாக ஒருநாள் நான் டாடா ஏசி வாகனத்தின் வந்துகொண்டிருந்தபோது மேலூா் செக்கடி அருகே போலீசாா் விசாாித்துக்கொண்டிருந்தாா்கள். அப்போது போலீசாா் என்னை நிறுத்தி என்னுடைய லைசென்ஸ் போன்ற ஆவணங்களை கேட்டு விசாாித்தாா்கள். போலீசாா் என்னை விசாாிக்கவில்லை.

**(சாட்சி 161 குவிமுச பிாிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்கும்படி அரசுதரப்பில் அனுமதிகோாியதன் அடிப்படையீல் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசாா் விசாரணையில் கடந்த 03.09.21ம் தேதி சுமாா் 6 மணியளவில் நான் மேலூா் அணிதா கலப்பை கம்பெணி அருகே உள்ள சுதந்திரம் மெட்டீாியல்ஸ் கமெ்பெணியிலிருந்து வெளியே வந்தபோது கொட்டகுடியை சோ்ந்த எம்.எஸ். என்ற பிரபாவும், ஆண்டிபட்டியை சோ்ந்த முனிச்சாமியும், அவ்வழியாக சென்றுகொண்டிருந்த சுப்பிரமணி மற்றும் பாண்டி ஆகிய இருவரையும் இருசக்கர வாகனத்தில் வழிமறித்து கத்தயைகாட்டி பணத்தை வாங்கிக்கொண்டிருந்தாா்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிாிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சாியல்ல. பின்னா் பிரபா என்ற எம்.எஸ். மற்றும் முனிச்சாமியும் அவா்கள்

வந்த இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பின்னர் நான் அவர்களிடம் சென்று என்ன நடந்தது என்று விசாரித்தபோது பிரபா என்ற எம்.எஸ் மற்றும் முனிச்சாமி இருவரும் டி.என். 59 சி.ஒய். 6626 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தில் வந்து அவர்கள் இருவரையும் வழிமறித்து கத்தியை காட்டி மிரட்டி சுப்பிரமணியிடமிருந்து பணம் ரூ.200-ம், பாண்டியிடமிருந்து பணம் ரூ. 300-யும். பறித்துக்கொண்டும் இந்த விசயத்தை பற்றி யாரிடமும் சொன்னால் கத்தியால் குத்திவிடுவோம் என்றும் மிரட்டிவிட்டு சென்றதாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை: எதிரிகள்தரப்பில்**

இல்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.204 /2021

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Subramaniyan | Father/Husband Name | : Veerachi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 23.05.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

மு.வி.

நான் மேலூரில் வசித்து வருகிறேன். நான் பெயின்டராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்கும்படி அரசுதரப்பில் அனுமதிகோரியதன் அடிப்படையீல் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 03.09.21ம் தேதி சுமார் 6 மணியளவில் நான் மேலூர் அணிதா கலப்பை கம்பெணி அருகே உள்ள நடந்து வந்துகொண்டிருந்தபோது எனக்கு எதிர் பக்கத்தில் கொட்டகுடியை சேர்ந்த எம்.எஸ். என்ற பிரபாவும், ஆண்டிபட்டியை சேர்ந்த முனிச்சாமியும், அவ்வழியாக சென்றுகொண்டிருந்த சுப்பிரமணி மற்றும் பாண்டி ஆகிய இருவரையும் இருசக்கர வாகனத்தில் வழிமறித்து கத்தயைகாட்டி பணத்தை வாங்கிக்கொண்டிருந்தார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பின்னர் பிரபா என்ற எம்.எஸ். மற்றும் முனிச்சாமியும் அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பின்னர் நான் அவர்களிடம் சென்று என்ன நடந்தது என்று விசாரித்தபோது

பிரபா என்ற எம்.எஸ் மற்றும் முனிச்சாமி இருவரும் டி.என். 59 சி.ஒய். 6626 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தில் வந்து அவர்கள் இருவரையும் வழிமறித்து கத்தியை காட்டி மிரட்டி சுப்பிரமணியிடமிருந்து பணம் ரூ.200-ம், பாண்டியிடமிருந்து பணம் ரூ. 300-யும். பறித்துக்கொண்டும் இந்த விசயத்தை பற்றி யாரிடமும் சொன்னால் கத்தியால் குத்திவிடுவோம் என்றும் மிரட்டிவிட்டு சென்றதாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை: எதிரிகள்தரப்பில்**

இல்லை.